திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, Prohibition Offenders கேசை விசாரிப்பதற்கு என்று 3, 4 தாலுகாக்களுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அந்த அந்த தாலுகாவிலே ஒரு நீதிமன்றம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் எந்த எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்றன என்ற தகவல் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் வந்தவுடன் குற்றங்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் தனி நீதி மன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

வழக்குரைஞர்களுக்கு இயக்ககம் அமைத்தல்.

353—(*வினா எண். 8670) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககத்தின் அமைப்புப் பணிகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அலுவலர் இது சம்பந்தமான பணிகளைக் கவனித்து வருகின்றார்.

திருமதி பா. வளர்மதி: தலைவர்வர்களே, இந்த இயக்ககம் தமிழ் நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில் செயல்படயிருக்கிறது? அரசுத் தரப்பில் போடப்படுகின்ற வழக்குகள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை. ஆகவே, அரசு வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இந்த இயக்ககத்தைப் பொறுத்தவரையில் குற்றவியல் வழக்குகளுக்குப் போடப்பட்டிருக்கிறது. ஏ.பி.பி. 2, ஏ.பி.பி. 1 போன்ற அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் பல்வேறு பகுதிகளில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வருகின்றனர். செப்பரேட் டைரக்டரேட் ஆஃப் பிராசிகியூஷன் மாநில அளவிலே போடப்பட்டு, அதற்கு என்று தனி இயக்ககத்தை ஏற்படுத்துகிறபோது அவர்களுடைய பணிகளைச் செம்மையாகக் கண்காணித்து திறம்படச் செயல்படுத்த விதிகளை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் அமைக்கப் பட்டிருப்பதைப் போன்று தமிழ் நாட்டிலேயும் அமைக்கப் படுவதற்கான பணிகளைக் கவனிக்க தனி அலுவலர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, அரசு வழக்கறிஞர்கள் அரசு சம்பந்தப்பட்ட வழக்குகளில் சில நேரங்களில் ஆஜராவதில்லை. ஆஜராகாத காரணத்தால் சில வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அதைத் தவிர்க்க அரசு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யக் கருதியிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு இல்லை. போதிய வழக்குரைஞர்கள் குற்றவியல் வழக்குகளுக்கு எல்லாம் தேவை என்று கருதித்தான் 108 additional posts of A.P.P., Grade II இரண்டாண்டுகளுக்கு முன்னால் அரசு துவக்கி இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினை தற்போது எழவில்லை.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷன் என்று தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷனாக யாரை நியமிப்பது? நீதிபதியையா? வழக்குரைஞரையா? அல்லது சட்டத் துறை அதிகாரிகளில் ஒருவரையா? அது பற்றி அரசு முடிவு செய்து விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட நிபுணத்துவம் பெற்ற ஒருவரை, அதாவது வழக்குரைஞர் பணியில் இருப்பவர்களில் இருந்தோ அல்லது நீதித் துறையில் இருந்தோ எடுத்து நியமிக்கலாம் என்று அரசு கருதியுள்ளது.

தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி.

354—(*வினா எண் 9273) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி ஏற்படுத்தும் திட்டம் காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதித் திட்டத்தினை விரைவில் கொண்டு வருவது குறித்து அரசு யோசித்து வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர் நல நிதி ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதத்தைப் போக்க வேண்டுமென்ற வகையில்தான் இந்த வினாவையே நான் போட்டு இருந்தேன். கிட்டத்தட்ட 25,000 வழக்குரைஞர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்குரைஞர்களுக்காக நல நிதியினை ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டத்தை முதலில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் அதிலும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்த பிறகு மராட்டிய மாநிலம், கேரளா போன்றவை எல்லாம் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். எனவே வருகிற கூட்டத் தொடரிலேயே இந்த வழக்குரைஞர்களுக்கான நல நிதிச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற முடிவை எடுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?